# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## GWOP.No.34/2024

dated : 11.04.2026

R.W. 1

Name மஜீதா பானு

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு ஊர் பண்பொழி என் கணவருக்கும் அதே ஊர்தான். ம.சா.ஆ.3 என்னுடைய திருமண அழைப்பிதழ் என்றால் சரிதான். அதில் என் கணவர் முகவரி பண்பொழி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது எனது முகவரியும் அதே ஊர்தான் குறிப்பிட்டுள்ளது. முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கூறப்பட்டுள்ள முகவரிதான் திருமண அழைப்பிதழிலும் காணப்படுகிறது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னர் நான் என் கணவருடன் விருதுநகரில் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தோம் என்றால் சரிதான். என் கணவர் சென்னையில் உள்ள நிறுவனத்தில் பணிபுரிந்தார். ஆனால் திருமணத்தின்போது Work from Home என்ற அடிப்படையில் விருதுநகரில் உள்ள வீட்டிலிருந்து வேலை பார்த்து வந்தார். திருமணமான 4 மாதங்கள் கழித்து நான் தாய்மையடைந்தேன். தாய்மையடைந்தவுடன் பெற்றோர் வீட்டிற்கு வந்தேன் டிசம்பர் மாதம் வீட்டிற்கு வந்தேன். மே மாதம் திருமணம் நடந்தது. நான் என் சுயவிருப்பத்துடன் என் பெற்றோர்

வீட்டிற்கு வந்தேன் என்றால் சரியல்ல மனுதாரர்தான் என்னை அனுப்பி வைத்தார்கள். என் கணவரும் அவரது குடும்பத்தினரும் அடிக்கடி என் பெற்றோர் வீட்டிற்கு வந்து என்னை பார்த்துச் செல்வார்கள் என்றால் சரிதான். 20.06.2023 அன்று குழந்தை பிறந்தது. குழந்தை பிறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு என் கணவர் என் பெற்றோர் வீட்டிற்கு வந்திருந்தார் குழந்தை பிறக்கும் வரை என்னுடனே தங்கியிருந்தார். குழந்தை பிறந்த பின்னர் 10 நாட்களும் என்னுடன்தான் இருந்தார். குழந்தை பிறந்த அன்று என் கணவர் குடும்பத்தினர் வந்து பார்த்துச் சென்றார்கள். அந்த சமயத்தில் என் கணவர் சென்னையில் உள்ள விடுதியில் தங்கியிருந்து வேலைக்குச் சென்று வந்தார். குழந்தை பிறந்த பின்னர் என் கணவருடன் சென்னையில் தங்கியிருந்து குடித்தனம் செய்ய வேண்டுமென்று நான் கூறினேன் என்றால் சரியல்ல. குழந்தை பிறந்த பின்னர் எங்கு சென்று வசிக்க வேண்டும் என்று நான் எந்த திட்டமும் கூறவில்லை. குழந்தை பிறந்த சமயத்தில் என் கணவர் மன அழுத்தத்தில் இருந்தார் என்றால் சரிதான். என்னுடன் இருந்த 20 நாட்களும் அவருக்கு என்ன காரணத்தினால் மன அழுத்தம் என்று நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். என் கணவர் எனக்கு குழந்தை பிறந்த 10 நாட்கள் கழித்து நேரடியாக சென்னைக்கு வேலைக்குச் சென்றார். 07.08.2023 அன்று அவர் தங்கியிருந்த விடுதியில் தற்கொலை செய்து கொண்டார். மனுதாரர்தான் சென்னைக்கு சென்று உடலை பெற்று பண்பொழிக்கு கொண்டுவந்தார்கள் என்றால் சரிதான். என் கணவரின் இறுதிச் சடங்குகள்

பண்பொழியில் வைத்து நடைபெற்றது. எங்கள் வீட்டிலிருந்து யாரும் சென்னைக்கு செல்லவில்லை என்றால் சரிதான் ஏனென்றால் எங்களுக்கு மறுநாள் காலையில்தான் தகவல் கிடைத்தது. முதல்நாள் இரவு 12 மணிக்கு என் கணவர் இறந்துபோனதாக தெரியவந்துள்ளது ஆனால் மறுநாள் காலையில்தான் தகவல் கிடைத்தது. மீரா சாகிப், செய்யது அப்பாஸ் என்ற இரண்டு நபர்களும் என் தாயாருடன் பிறந்த சகோதரியின் மகன்கள் ஆவார்கள். மேற்படி இருவரும் சடலக்கூராய்வின்வரை உடனிருந்துள்ளார்கள். அவர்கள் சடலக்கூராய்வு நடந்தபோது வரை நடைபெற்ற விவரங்களை என்னிடம் கூறினார்கள். 8ம் தேதி காலையில் சடலம் பண்பொழிக்கு வந்துவிட்டது. என் கணவர் இறப்பில் சந்தேகம் இருப்பதாக காவல் நிலையத்தில் நான் நாளது தேதிவரை புகார் கொடுக்கவில்லை. மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ள காரணம் தெரியும். மனுதாரருக்கு என் கணவரான ஒரு மகனும், மற்றொரு மகளும் மட்டுமே வாரிசுகள் என்றால் சரிதான். என் கணவரின் சகோதரிக்கு திருமணமாகவில்லை என்றால் சரிதான் அவர் கல்லூரியில் படித்து வருகிறார். மனுதாரர் தன்னை பாதுகாவலராக நியமிக்ககோரி மட்டுமே மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் குழந்தையை என்னிடமிருந்து பிரிக்கவேண்டுமென்று அதில் கூறப்படவில்லை என்றால் சரிதான். என் மகன் மனுதாரரின் ஒரே பேரக்குழந்தை என்றால் சரிதான். மனுதாரர் என் குழந்தையை பார்த்துச் செல்வதில் எனக்கு ஆட்சேபனை உண்டு. மனுதாரரை பார்த்தால் என் குழந்தையின் எதிர்காலத்திற்கு சிறப்பாக இருக்காது என்று நான்

நம்புகிறேன் அதனால் எனக்கு விருப்பமில்லை. மனுதாரர் தனது பேரனை பார்ப்பதனை தடுப்பதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. என் கணவரின் தாத்தா அதாவது மனுதாரரின் தந்தை தற்போதும் உயிருடன்தான் உள்ளார் என்றால் சரிதான். அவரது இறுதி ஆசை தனது பேரனின் மகனை பார்க்க வேண்டும் என்றும் அதை தடுக்க உரிமையில்லை என்றால் சரியல்ல அவருக்கு தற்போது 90 வயது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இம்மனுவிற்கு முன்பாக வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டிருந்தது என்றால் சரிதான். இதே காரணத்திற்கு ம.சா.ஆ-8 புகார் பண்பொழியில் உள்ள ஜமாத்தில் கொடுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்ட பின்னர்தான் வேறு வழியின்றி இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் மனுதாரரிடம் ரூ.2,50,000/- கொடுத்து வைத்திருந்ததாகவும் அதனை திரும்ப கேட்டதால் பிரச்சனை என்றும் அதன் காரணமாகவே தற்கொலை செய்து கொண்டார் என்று கூறியிருக்கிறேன் அதற்கு என்னிடம் ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். எனது திருமணம் எனது வளைகாப்பும் என் கணவரின் இறுதிச் சடங்கும் பண்பொழியில் வைத்து நடந்தது என்றால் சரிதான். என் கணவர் என்னிடம் கூறிய விவரங்கள் அலைபேசியின் சிம்கார்டில் உள்ளது அந்த சிம்கார்டு தற்போது மனுதாரர் வசம் உள்ளது. இந்த விபரங்களை நான் எங்கும் கூறவில்லை என்றால் சரிதான். ஜமாத்தில் சொன்னேன். ரூ.2,50,000/- திரும்ப கொடுக்கவில்லை என்பதற்காக ஒருவர்

தற்கொலை செய்து கொண்டது நம்பத்தக்கதாக இல்லை என்றால் சரியல்ல. இஸ்லாமிய சட்டப்படி தந்தையை இழந்த குழந்தைக்கு தந்தையின் தந்தையே காப்பாளராக இருக்க முடியும் அதை ஒருபோதும் என்னால் மறுக்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. மனு அனுமதிக்கதக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.04.11 18:16:19 +0530